ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2164/53 - 2020 පෙබරවාරි මස 27 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.27

*2164/53 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 21/78* (XV) (A).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*21 ஆம் பிரிவுடனும் 139 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகக் கருதப்படுகின்றதும் இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதுமான (2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதிய 2160/44 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதுமான), 2009 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதிய 1603/ 35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படும் "மானிடவியல்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்" என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல் II இல் காணப்படும் எல்லாப் பதிவுகளுக்கும் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

கலாநிதி பந்துல குணவர்த்தன,
உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சர்.

கொழும்பு,
*2020, பெப்புருவரி 25.*

1A - PG 4902 — 518 (2020/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| *நிரல் I* *பீடம்* | | *நிரல் II* *துறை* |
|---|---|---|
| "மானிடவியல்கள் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம் | 1. | பொருளியல் துறை |
| | 2. | சமூகப் புள்ளிவிபரவியல் துறை |
| | 3. | புவியியல் துறை |
| | 4. | சிங்களம் மற்றும் வெகுசன தொடர்பாடல் துறை |
| | 5. | வரலாறு மற்றும் தொல்பொருளியல் துறை |
| | 6. | பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறை |
| | 7. | ஆங்கிலம் மற்றும் மொழியியல் துறை |
| | 8. | அரசியல் விஞ்ஞானத் துறை |
| | 9. | குற்றவியல் மற்றும் குற்ற நீதித்துறை |
| | 10. | சமூகவியல் துறை |
| | 11. | மனித இன இயல் துறை |
| | 12. | தத்துவம் மற்றும் உளவியல் துறை |
| | 13. | ஆங்கில மொழிக் கற்பித்தல் துறை |
| | 14. | மொழிகள், கலாசார கற்கைகள் மற்றும் அரங்கேற்றக் கலைகள் துறை |
| | 15. | இசை மற்றும் ஆக்கபூர்வ தொழில்நுட்பவியல் துறை.". |

*03-508*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.